# வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

## சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2023 - 2024

## மானியக் கோரிக்கை எண். 26


**பி. கே. சேகர்பாபு**

**இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்**



©
தமிழ்நாடு அரசு
2023

## பொருளடக்கம்


| வ. எண். | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| | முன்னுரை | 1–4 |
| 1.1 | நிறுவன அமைப்பு | 5 |
| 1.2 | சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் செயல்பாடுகள் | 5–60 |
| 1.3 | புதிய முயற்சிகள் | 60–68 |
| | முடிவுரை | 69 |

## மானியக் கோரிக்கை எண்.26

## வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

## 1. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

## கொள்கை விளக்கக் குறிப்பு 2023–2024

### முன்னுரை

நகரமயமாக்கல் என்பது பொருளாதார வளர்ச்சியின் ஒரு முக்கிய அம்சம் ஆகும். பெரிய நகர்ப்புற மையங்களின் பொருளாதார வளர்ச்சி, பல்வேறு வேலை வாய்ப்புகளையும் வாழ்வாதாரத்திற்கான வழிமுறைகளையும் வழங்குகிறது. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) நகர்ப்புறங்கள் முக்கியப் பங்களிப்பாளர்களாக இருப்பதால், நகரமயமாக்கல் விரிவடையும்போது தேசிய வருமானத்தின் பங்கும் அதிகரிக்கிறது.

சென்னைப் பெருநகரப் பகுதியின் வளர்ச்சியை ஒழுங்குபடுத்துவதற்கு விரிவான திட்டமிடல் தேவை என்றுணர்ந்து, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (செ.பெ.வ.கு) அமைக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டது. இக்குழுமம் 1972–இல்

மெட்ராஸ் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (MMDA) என்ற பெயரில் தற்காலிக அமைப்பாக இருந்து, பின்னர் 1975–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971 பிரிவு 9–A–இன் கீழ் சட்டப்பூர்வ குழுமமாக மாறியது. 1972–ஆம் ஆண்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் அதிகார செயல்திட்ட வரம்பு (சென்னைப் பெருநகர திட்டமிடல் பகுதி) 1,189 சதுர.கி.மீ ஆக இருந்தது.

திருப்பெரும்புதூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், கும்மிடிப்பூண்டி போன்ற பெருநகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் நடைபெற்று வரும் துரித வளர்ச்சிகளைக் கணக்கில் கொண்டு, அரசாணை (நிலை) எண். 184, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 21.10.2022–இல் திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களில் உள்ள பகுதிகளையும் சேர்த்து ஏற்கனவே இருந்த சென்னைப் பெருநகரப் பகுதியான 1,189 சதுர.கி.மீட்டரிலிருந்து 5,904 சதுர.கி.மீட்டராக விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதில் 4 மாநகராட்சிகள்

(பெருநகர சென்னை மாநகராட்சி, ஆவடி மாநகராட்சி, காஞ்சிபுரம் மாநகராட்சி மற்றும் தாம்பரம் மாநகராட்சி), 12 நகராட்சிகள், 14 பேரூராட்சிகள் மற்றும் 22 ஊராட்சி ஒன்றியங்களுடன் 1,321 கிராமங்களை உள்ளடக்கிய பகுதிகளைக் கொண்டு சென்னைப் பெருநகரத் திட்டப் பரப்பு விரிவாக்கம் செய்யப்பட்டது.

சென்னைப் பெருநகரப் பகுதியுடன் திருவள்ளூர், திருத்தணி, செங்கல்பட்டு மற்றும் அரக்கோணம் போன்ற தனித்த உள்ளூர் திட்டக் குழுமங்களும், மாமல்லபுரம், கும்மிடிப்பூண்டி மற்றும் காஞ்சிபுரம் உள்ளிட்ட கூட்டு உள்ளூர் திட்டக் குழுமங்களும் மற்றும் மாமல்லபுரம் புதுநகர் வளர்ச்சிக் குழுமத்தையும் இணைப்பதற்கான முன்மொழிவு தயாரிக்கப்பட்டுள்ளது. விரிவாக்கப்பட்ட பகுதிக்கான மண்டலச் செயலாக்கத் திட்டம் (Regional Planning Strategy) தயாரிக்கப்படவுள்ளது.

# 2023-2024 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

**ரூபாய் ஆயிரத்தில் (தொகு மொத்தம்)**

| வ. எண் | துறைகள் | | வருவாய் | மூல தனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | வீட்டுவசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித் துறை– தலைமைச் செயலகம் | அனுமதித்தது | 167,75,95 | — | 211,50,00 | 379,25,95 |
| 2. | நகர் ஊரமைப்பு இயக்ககம் | சாட்டியது<br>அனுமதித்தது | 1<br>736,57,66 | —<br>--- | —<br>--- | 1<br>736,57,66 |
| 3. | கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் (பதிவாளர்) | சாட்டியது<br>அனுமதித்தது | 1<br>14,05,31 | —<br>--- | –<br>1 | 1<br>14,05,32 |
| 4. | **சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்** | **அனுமதித்தது** | **50,00,02** | **2,000,00,03** | **8,015,00,01** | **10,065,00,06** |
| 5. | தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் | அனுமதித்தது | 32,16,14 | 1 | — | 32,16,15 |
| 6. | தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் | அனுமதித்தது | 2,727,18,07 | 4 | 1 | 2,727,18,12 |
| 7. | **சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து குழுமம்** | **அனுமதித்தது** | **14,56,05** | **—** | **—** | **14,56,05** |
| | **மொத்தம்** | **சாட்டியது**<br>**அனுமதித்தது** | **2**<br>**3,742,29,20** | **...**<br>**2,000,00,08** | **–**<br>**8,226,50,03** | **2**<br>**13,968,79,31** |

## 1.1 நிறுவன அமைப்பு

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தற்போது மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரின் கீழ் செயல்படுகின்றது. துணைத் தலைவர், உறுப்பினர்–செயலர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி ஆகியோர் இந்தக் குழுமத்தில் செயல் அலுவலர்களாக உள்ளனர். இக்குழுமத்தின் அதிகாரக் குழுவானது அரசாங்கத்தால் பரிந்துரைக்கப்பட்ட, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுத் துறைகளின் தலைவர்கள், கல்வி நிறுவனங்கள், வர்த்தகம் மற்றும் வணிகத்துறையின் பிரதிநிதிகள் போன்ற பல்வேறு பங்குதாரர்களை உள்ளடக்கியதாகும்.

## 1.2 சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் செயல்பாடுகள்

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் பின்வரும் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன.

1. நிருவாகப் பிரிவு (Administrative Unit)
2. முழுமைத் திட்டப் பிரிவு (Master Plan Unit)

3. பரப்பு வளர்ச்சிப் பிரிவு (Area Development Unit)
4. பரப்புத் திட்டப் பிரிவு (Area Plans Unit)
5. வரன்முறைத் திட்டப் பிரிவு (Regularisation Unit)
6. சாலை மற்றும் இரயில் பிரிவு (Road and Rail Unit)

### 1.2.1 நிருவாகப் பிரிவு (Administrative Unit)

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் அலுவலர்கள் / ஊழியர்களுக்கான அனைத்து நிருவாக நடவடிக்கைகளும் இப்பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

#### 1.2.1.1 சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் பணி விதிமுறைகள், 2022

26.02.1980 அன்று பிறப்பிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண். 210–இன் வாயிலாக, தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971 – பிரிவு 124–இன் துணைப்பிரிவு (1)–இன் கீழ், குழும ஊழியர்களுக்கான பணி விதிமுறைகளுக்கு அரசு ஒப்புதல் அளித்தது. மேலும் தற்போதைய தொழில்நுட்பத் தேவைக்கேற்ப, முந்தைய பணி விதிமுறைகளில் பல மாற்றங்களை

உருவாக்கி, புதிய பணி விதிமுறைகள் அரசாணை (நிலை) எண்.262 மூலம் 16.12.2022 அன்று அரசு ஒப்புதல் அளித்தது. இப்பணி விதிமுறைகள் 01.01.2023 முதல் நடைமுறையில் உள்ளன.

**1.2.1.2 நேர்முக ஆட்சேர்ப்பு**

2022–ஆம் ஆண்டில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் 10 ஆண்டுகளுக்கும் மேலாகக் காலியாக இருந்த 15 உதவித் திட்ட அமைப்பாளர்கள் (Assistant Planner) மற்றும் 15 திட்ட உதவியாளர்களும் – நிலை–I (Planning Assistant Grade–I) நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மூன்றாம் முழுமைத் திட்டம், வெளிவட்டச் சாலை மேம்பாடு, புதுநகரங்கள் மேம்பாடு, மறுவடிவமைப்புத் திட்டங்கள், பொது உட்கட்டமைப்புத் திட்டங்கள் போன்ற பல்வேறு செயல்பாடுகளை மேற்கொள்வதற்கான ஆயத்தங்களைக் கருத்தில் கொண்டு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் இவர்களை நியமனம் செய்துள்ளது.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் ஓட்டுநர் பதவிக்கான 10 காலியிடங்கள் 2022–ஆம் ஆண்டில் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட்டுள்ளன. இதில் ஒரு பெண் ஓட்டுநரும் நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் 13 உதவிப் பொறியாளர்களைப் பணியமர்த்துவதற்கு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தை (TNPSC) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நாடியுள்ளது. மேலும், உதவிப் பொறியாளர்கள் நியமிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**1.2.1.3 தளிரகம்**

தமிழகத்தில் குழந்தை காப்பகத்தைத் திறக்கும் அரசு நிறுவனங்களில் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமமும் ஒன்றாகும். 2007–ஆம் ஆண்டின் மகப்பேறு நலச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை உள்ளடக்கி, ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்காக தளிரகம் திட்டம்

உருவாக்கப்பட்டுள்ளது. பணிபுரியும் பெற்றோர்கள், குறிப்பாகப் பெண்கள், அவர்களின் பணிச் சூழலையும், வீட்டுச் சூழலையும் சமமாகப் பராமரிக்க உதவிடும் விதமாக, அவர்களுக்கு ஏற்படும் தடைகளைத் தகர்க்கும் வகையில் இத்திட்டம் தன் முதல் படியை எடுத்து வைத்துள்ளது. குழந்தைகள் காப்பகத்திற்கு இரண்டு முழுநேரப் பராமரிப்பாளர்களை சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நியமித்துள்ளது.

### 1.2.2 முழுமைத் திட்டப் பிரிவு (Master Plan Unit)

முழுமைத் திட்டப் பிரிவு சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் ஒரு முக்கியமான பிரிவாகும். இப்பிரிவின் முக்கியச் செயல்பாடுகள் கீழ்வருமாறு:

i. முழுமைத்திட்டம் தயாரித்தல்

ii. விரிவான வளர்ச்சித்திட்டம் தயாரித்தல்

iii. வளர்ச்சி வரைமுறைகளை மதிப்பாய்வு செய்து திருத்தங்களை முன்மொழிதல்

iv. அரசாங்கத்தால் குறிப்பிடப்படும் நகர்ப்புற மேம்பாடு மற்றும் பெருநகரத் திட்டமிடல்

தொடர்பான கொள்கை முடிவுகளைச் செயல்படுத்துதல்.

v. பாரம்பரிய கட்டடங்கள்/ வளாகங்களைப் பாதுகாத்தல்.

vi. முழுமைத் திட்டம் செயல்படுத்துதல் மற்றும் திருத்தம் செய்தல்.

vii. முழுமைத் திட்டத்தின் கீழ், துறை வாரியான குழுக்களின் கூட்டங்களை நடத்துதல்

viii. புவிசார் தகவல் அமைப்பில் (GIS) முழுமைத் திட்டம் தயாரித்தல்

ix. நிலவகைப்பாடுகளில் உபயோக மாற்றங்களை முழுமைத் திட்டம் மற்றும் விரிவான வளர்ச்சித் திட்டங்களில் அமல்படுத்துதல்.

x. அரசு குறிப்பிடும் இடம்சார்ந்த திட்டங்களைத் தயாரித்தல்.

### 1.2.2.1 சென்னைப் பெருநகரப் பகுதிக்கான மூன்றாம் முழுமைத் திட்டம் (2027– 2046) தயாரித்தல்

சென்னைப் பெருநகரப் பகுதியில் பெருகிவரும் மக்கள்தொகைக்கு ஏற்ப, போக்குவரத்து மற்றும் உள்கட்டமைப்பில் கவனம் செலுத்தவும், நகரத்தின் நெரிசலைக் குறைப்பதற்கும் 1976–ஆம் ஆண்டில்

முதலாம் முழுமைத் திட்டம் (1976–1996) தயாரிக்கப்பட்டது. முதலாம் முழுமைத் திட்டத்தைத் திறம்படச் செயல்படுத்தியதின் காரணமாக இரண்டாம் முழுமைத் திட்டம் (2006–2026) தயாரிக்க அடித்தளம் அமைத்தது. இரண்டாம் முழுமைத் திட்டமானது நகர்ப்புறப் பகுதிகளில் வளர்ச்சியை ஒழுங்குபடுத்துவதற்கும், நகரத்தின் நெரிசலைக் குறைப்பதற்கும் செயற்கைக்கோள் நகரங்கள் மற்றும் புதுநகரங்களை உருவாக்குவதிலும் கவனம் செலுத்துகிறது. வெள்ள அபாயங்கள், மாசுபாடு, நீர்நிலைகள் குறைதல், நகரத்தில் போதுமான பசுமை இல்லாதது போன்ற பிற சுற்றுச்சூழல் மற்றும் நிலையான வளர்ச்சி சவால்களை எதிர்கொள்ள இரண்டாம் முழுமைத் திட்டம் முயற்சித்தது. இரண்டாம் முழுமைத் திட்டமானது சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட நீர்ப்பிடிப்பு பகுதிகளைக் கண்டறிந்து அவற்றைச் சுற்றியுள்ள அடர்த்தியைக் கட்டுப்படுத்த

வரையறுக்கப்பட்ட வளர்ச்சி மண்டலங்களாக அறிவித்தது. ஊக்கத் தளப்பரப்பு குறியீடு (FSI), மாற்றத்தக்க மேம்பாட்டு உரிமைகள் (TDR), திறந்தவெளி இட ஒதுக்கீடு (OSR) மற்றும் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை முறைப்படுத்துதல் போன்ற பல்வேறு மேம்பாட்டு விதிமுறைகளும் இத்துடன் இணைக்கப்பட்டன.

இரண்டாம் முழுமைத் திட்டத்திற்கான கால வரம்பு 2026–ஆம் ஆண்டு முடிவடைவதால், மூன்றாம் முழுமைத் திட்டத்திற்கான (2027–2046) ஆயத்தப் பணிகளை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தொடங்கியுள்ளது. உலக வங்கியின் உதவியோடு தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் வாழ்விட மேம்பாட்டுத் திட்டத்தின் (TNHHDP) கீழ் மூன்றாம் முழுமைத் திட்டம் பற்றிய ஆய்வுகள் தொடங்கப்பட்டுள்ளன. பொருளாதார மேம்பாடு, நகர்ப்புற வீட்டுவசதி, சமூக உட்கட்டமைப்பு, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை, பாலின சமத்துவம், மரபு மற்றும் சுற்றுலா,

போக்குவரத்து மற்றும் போக்குவரத்து தொழில்நுட்பம், நகர்ப்புற உட்கட்டமைப்பு போன்ற சேவைகள் மூன்றாம் முழுமைத் திட்டத்தில் கவனம் செலுத்தப்பட வேண்டிய முக்கியத் துறைகளாகும்.

2027−2046−க்கான 'மூன்றாம் முழுமைத் திட்டத்திற்கான தொலைநோக்கு ஆவணம் தயாரித்தல் குறித்த ஆய்வு தொடங்கியுள்ளது. இந்த ஆய்வின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 15 மண்டலங்களிலும், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிக்கு வெளியே உள்ள 14 இடங்களிலும் பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் டிசம்பர் 2022 முதல் ஜனவரி 2023 வரை நடைபெற்றது. பல்வேறு துறைகளுடனான துறைசார் கூட்டங்கள் விரைவில் நடைபெறும். மேலும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும நிறுவனத்தினை வலுப்படுத்துவதற்கான மதிப்பீடு மற்றும் செயல் திட்டத்திற்கான ஆவணம் தயாரித்தல், சென்னைப் பெருநகர் பகுதியில் நில மதிப்பு, அடர்த்திப்பரவல் மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த

வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள் 2019–ஐ வலுப்படுத்துவதற்கான மதிப்பாய்வு மற்றும் பரிந்துரைகளுக்கான ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

சென்னைப் பெருநகரப் பகுதியின் (CMA) வேலைவாய்ப்பு மற்றும் வருமான வகையிலான இடப்பரவல் மற்றும் ஒருங்கிணைப்புப் பொருளாதாரங்கள் (Spatial Distribution of Employment and Agglomeration Economies), வீட்டுவசதித் தேவை மற்றும் விநியோக முறை, (Demand and Supply pattern of Housing) சென்னைப் பெருநகரப் பகுதியின் நீர் மற்றும் பசுமை உட்கட்டமைப்பை ஒருங்கிணைத்து அதன்படி வெள்ள அழிவுகள் மற்றும் அபாயங்களை தடுக்கும் வகையில் நகர்ப்புற திட்டமிடல் மற்றும் நிர்வாகம் (Integrating Blue–Green Infrastructure for Flood Disaster and Risk Reduction in Urban Planning) போன்றவை குறித்த ஆய்வுகள் மூன்றாம் முழுமைத் திட்டத்திற்கான உள்ளீடுகளை வழங்கும் கூறுகளாக முன்மொழியப்பட்டுள்ளன.

மூன்றாம் முழுமைத் திட்டத் தயாரிப்பினை ஒருங்கிணைக்கப் பல்வேறு துறைகளில் இருந்து அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மூல வரைபடத்தைப் (Base Map) புதுப்பிப்பதற்கான நில அளவை வரைபடங்களைச் (Survey Map) சேகரிக்கும் பணியும் நடைபெற்று வருகிறது.

### 1.2.2.2 சாலை வலைப்பின்னல் அமைப்புத் திட்டம் (Grid of Roads)

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் 201 கிராமங்களுக்கு சாலைகள் வலைப்பின்னல் அமைப்பு (Grid of Roads) திட்டத்தைத் தயாரித்துள்ளது. இத்திட்டம் சென்னைப் பெருநகரப் பகுதியின் வளர்ச்சியடையாத பகுதிகளில் சிறப்பான போக்குவரத்தை அளிக்க சாலை படிநிலை அமைப்பை (Hierarchial System of Roads) வழங்குகிறது.

தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971, பழைய சாலைகள் மற்றும் தெருக்களை மாற்றியமைத்தல், புதிய சாலைகள் மற்றும்

தெருக்களை அமைத்தல், சமூக வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற நுண்ணிய முன்னேற்றங்களுக்கான விரிவான வளர்ச்சித் திட்டங்களை (Detailed Development Plan) தயாரிக்க வழிவகுக்கிறது. சென்னைப் பெருநகரப் பகுதி விரைவான வளர்ச்சியைக் கண்டு வருகிறது. இதனால் வளர்ந்து வரும் போக்குவரத்து நெரிசலை சமாளிக்க சாலைகளின் படி நிலை அமைப்பு (Hierarchial system of Roads) மூலம் சீரிய போக்குவரத்து சுழற்சியினை அமைப்பது அவசியமாகிறது. சென்னைப் பெருநகரப் பகுதியை ஒட்டிய கிராமப் பகுதிகளில் பெரிய அளவில் வளர்ச்சிகள் உருவாகி வருவதால் அதற்கேற்றார் போல சிறந்த சாலை வலைப்பின்னல் அமைப்பையும் (Network of Roads) போக்குவரத்து சுற்றோட்டத்தையும் முன்கூட்டியே திட்டமிடுவது அவசியமாகிறது.

சென்னைப் பெருநகரப் பகுதியில் ஏற்கனவே உள்ள 422 சாலைகளுக்கு விரிவாக்கப் பணிகள் மற்றும் சாலை வலைப் பின்னல் அமைப்பு

(Grid of Roads) திட்டத்தில் 653 புதிய சாலைகள் அமைக்க கருத்துரு முன்மொழியப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக, சாலை வலைபின்னல் அமைப்புத் திட்டத்தில் 422 சாலைகளை அகலப்படுத்தும் முடிவைச் செயற்படுத்தும் பொருட்டு நாளிதழ்களில் அறிவிக்கை செய்து பொதுமக்களின் ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளன. பெறப்பட்ட கருத்துக்கள் ஆய்வு செய்யப்பட்டு ஒப்புதலுக்கு பின் இரண்டாம் முழுமைத் திட்டத்தில் இப்பொருண்மையை இணைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இரண்டாம் கட்டமாக சாலை வலைப்பின்னல் அமைப்புத் திட்டத்தில் உத்தேசிக்கப் பட்டுள்ள 653 புதிய சாலைகள் குறித்த அறிவிக்கை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2022–23–ஆம் நிதியாண்டில் சென்னைப் பெருநகர்ப் பகுதிக்குள் வரும் (18 மீ மற்றும் அதற்கு மேல்) அகலம் கொண்ட சாலைகளை ரூ. 200 கோடி

மதிப்பீட்டில் விரிவுபடுத்துவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டதினைத் தொடர்ந்து முதற்கட்டமாக வெளிவட்ட சாலைக்கு அருகில் இரண்டு புதிய சாலைகள் அமைக்கத் தீர்மானம் செய்யப்பட்டது. ஏற்கனவே உள்ள மாரம்பேடு, சோத்துப்பாக்கம், மலையம்பாக்கம் இவற்றின் வழியாக வெளிவட்ட சாலைகளை இணைக்கும் மூன்று சாலைகளை விரிவாக்கம் செய்வது குறித்தும் நாளிதழ்களில் செய்தி வெளியிடப்பட்டது. விரிவான கள ஆய்வுகளை நடத்தி, நில எடுப்பு அட்டவணையை (Land Plan Schedule) தயாரிப்பதற்கான செயல்முறைகள் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் விரைவாக நடைப்பெற்று வருகின்றன.

மேலும் அரசாணை (நிலை) எண். 41, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 30.03.2023–இன் மூலமாக இதற்கான ஒப்புதலை அரசு வழங்கியுள்ளது.

**1.2.2.3 மீஞ்சூர், திருமழிசை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் மாமல்லபுரம் ஆகிய துணைநகரங்களுக்கான புதுநகர் மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்தல்.**

திருமழிசை, மீஞ்சூர், திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், மாமல்லபுரம் போன்ற நகர்ப்புற வளர்ச்சி மையங்களையும், அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளையும் துணைக்கோள் நகரங்களாக உருவாக்கிட இவை ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக புதுநகர் மேம்பாட்டுத் திட்டங்களை (New Town Development Plans) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உருவாக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

**அ) மீஞ்சூர் புதுநகர்**

மீஞ்சூரில் உள்ள புதுநகர் வளர்ச்சிக்கான பகுதி, 111.62 சதுர கி.மீட்டர் பரப்பளவைக் கொண்டு மீஞ்சூர் கிராமத்தைச் சுற்றியுள்ள பன்னிரண்டு கிராமங்களை உள்ளடக்கியதாக வரையறுக்கப்பட்டுள்ளது. மீஞ்சூரை, நகர்ப்புற வளர்ச்சி மையமாக (Urban Growth Centre) மேம்படுத்துவதற்கான தொலைநோக்குப் பார்வையைக்

கருத்தில் கொண்டு, மீஞ்சூர் புதிய நகரத்திற்கான விரிவான பொருளாதார மற்றும் வணிகத் திட்டம், புதுநகர் மேம்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தீர்மானித்துள்ளது.

அரசாணை (நிலை) எண்.15, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 07.02.2023–இன் மூலம் மீஞ்சூர் புதுநகருக்காக அதன் வரையறுக்கப்பட்ட எல்லையில் அமைந்துள்ள பன்னிரண்டு கிராமங்களை உள்ளடக்கி, அறிவிக்கை செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து 22.02.2023 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை (Gazette Notification) வெளியிடப்பட்டது. இவ்வறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து அந்தப் பகுதியில் வசிக்கும் நபர்கள், உள்ளாட்சி அமைப்புகள் / நிறுவனங்களிடமிருந்தும் ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் பெறப்பட்டு வருகிறது.

**ஆ) திருமழிசை புதுநகர்**

திருமழிசை புதுநகர்ப் பகுதி 34.1 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் 17 கிராமங்களை உள்ளடக்கியதாக வரையறுக்கப்பட்டுள்ளது. திருமழிசை புதுநகருக்கான உத்தேசிக்கப்பட்டுள்ள எல்லையை வரையறுத்து வெளியிடும் பொருட்டும், வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் ஏதேனும் ஆட்சேபனை மற்றும் பரிந்துரைகளுக்கு அழைப்பு விடுக்கும் நோக்கத்திற்காகவும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அரசாணை (நிலை) எண். 209, நாள் 23.11.2022 அன்று வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து 14.12.2022 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து பெறப்பட்ட ஆட்சேபனைகள்/ ஆலோசனைகள் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. மேலும், 15வது நிதிக்குழுவின் கீழ் இத்திட்டத்திற்கான ஒன்றிய அரசின் நிதியுதவி பெறும் போட்டிக்கான கருத்தியல் முழுமைத்திட்ட அறிக்கை 30.12.2022 அன்று சமர்ப்பிக்கப்பட்டது.

### இ) திருவள்ளூர் புதுநகர்

திருவள்ளூரில் புது நகர வளர்ச்சிக்கான பகுதி 37.74 சதுர கி.மீட்டர் பரப்பளவைக் கொண்ட 11 கிராமங்களை உள்ளடக்கியதாக வரையறுக்கப்பட்டுள்ளது. திருவள்ளூர் புதிய நகரத்தை நகர்ப்புற வளர்ச்சி மையமாக (Urban Growth Centre) மேம்படுத்துவதற்கான ஒட்டுமொத்த பார்வையைக் கருத்தில் கொண்டு புதிய நகர மேம்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு ஒப்புதல் அளிக்க குழுமம் தீர்மானித்துள்ளது.

திருவள்ளூரில் உத்தேசித்துள்ள புதிய நகரத்திற்கான 11 கிராமங்களை உள்ளடக்கி அதன் வரையறுக்கப்பட்ட எல்லையை அறிவிக்கை செய்து அரசாணை (நிலை) எண். 14, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 07.02.2023-இன் மூலமாக அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து 22.02.2023 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை (Gazette Notification) வெளியிடப்பட்டது.

இவ்வறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து அந்தப் பகுதியில் வசிக்கும் நபர்கள், உள்ளாட்சி அமைப்புகள் / நிறுவனங்களிடமிருந்தும் ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் பெறப்பட்டு வருகிறது.

**ஈ) செங்கல்பட்டு புதுநகர்**

செங்கல்பட்டு புதுநகர் வளர்ச்சிக்கான பகுதி 136.25 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்ட 60 கிராமங்களை உள்ளடக்கியதாக வரையறுக்கப்பட்டுள்ளது. செங்கல்பட்டு புதிய நகரத்தை நகர்ப்புற வளர்ச்சி மையமாக (Urban Growth Centre) மேம்படுத்துவதற்கான ஒட்டுமொத்த தேவையைக் கருத்தில் கொண்டு, புதிய நகர மேம்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு ஒப்புதல் அளிக்க குழுமம் தீர்மானித்துள்ளது.

அரசாணை (நிலை) எண்.210, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 23.11.2022–இன் மூலம், செங்கல்பட்டு புதுநகருக்காக உத்தேசித்துள்ள 60 கிராமங்களை உள்ளடக்கி அதன்

எல்லையை வரையறுப்பதில் உள்ள ஆட்சேபனைகளைக் கோருவதற்கான அறிவிக்கை செய்து ஆணை வெளியிடப்பட்டது. இதனை தொடர்ந்து 14.12.2022 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. இதன்படி பெறப்பட்ட ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

**உ) காஞ்சிபுரம் புதுநகர்**

காஞ்சிபுரம் புதுநகர் வளர்ச்சிக்கான பகுதி 62.78 சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்டு 18 கிராமங்களை உள்ளடக்கி வரையறுக்கப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் புதுநகரைப் பாரம்பரிய அடிப்படையிலான நகர்ப்புற வளர்ச்சி மையமாக (Heritage Based Urban Growth Centre) மேம்படுத்துவதற்கான தொலைநோக்குப் பார்வையைக் கருத்தில் கொண்டு, விரிவான புதுநகர் மேம்பாட்டுத் திட்டத்தைத் தயாரிக்க சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தீர்மானித்துள்ளது.

அரசாணை (நிலை) எண்.13, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 07.02.2023–இன் மூலம், காஞ்சிபுரம் புதுநகருக்காக உத்தேசித்துள்ள 18 கிராமங்களை உள்ளடக்கி அதன் எல்லையை வரையறுப்பதில் உள்ள ஆட்சேபனைகளைக் கோருவதற்கான உத்தரவை அரசு வழங்கியுள்ளது. இதனைத் தொடர்ந்து 22.02.2023–ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை (Gazette Notification) வெளியிடப்பட்டது. இவ்வறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து அந்தப் பகுதியில் வசிக்கும் நபர்கள், உள்ளாட்சி அமைப்புகள் / நிறுவனங்களிடமிருந்தும் ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் பெறப்பட்டு வருகிறது.

**ஊ) மாமல்லபுரம் துணைக்கோள் நகரம்**

நடைபெற்று வரும் 2023–24 சட்டமன்ற கூட்டத்தொடரில் மேதகு ஆளுநர் உரையில் முன்மொழியப்பட்ட மாமல்லபுரம் துணைக்கோள் நகரம் அமைக்க ஏதுவாக, 1971–இல் உருவாக்கப்பட்ட

தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டத்தின் கீழ் புதுநகர் மேம்பாட்டுத் திட்டத்திற்காக வரையறுக்கப்பட்டுள்ள நடைமுறையைப் பின்பற்றி **"மாமல்லபுரம் துணைக்கோள் நகரம்"** அமைக்கப்பட உள்ளது. மேலும் கிழக்குக் கடற்கரைச் சாலையை நான்கு வழிச் சாலையாக மேம்படுத்துவதுடன் மாமல்லபுரம் துணைக்கோள் நகரத்தின் வளர்ச்சியும் சென்னைப் பெருநகரப் பகுதியின் எதிர்கால வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும்.

### 1.2.3 பரப்பு வளர்ச்சிப் பிரிவு (Area Development Unit)

சென்னைப் பெருநகரப் பகுதிக்கான முழுமைத்திட்டத்தின் செயல்பாடுகளுக்கு வடிவம் கொடுக்கும் திட்டங்களைத் செயல்படுத்துவதற்காக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில், பரப்பு வளர்ச்சிப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது. இப்பிரிவு பின்வரும் உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது.

**(i) திட்டமிடல் பிரிவு,**

திட்டங்களை உருவாக்குதல், நிலங்களைக் கையகப்படுத்துதல் மற்றும் திட்டத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றைத் திட்டமிடல் பிரிவு மேற்கொள்ளுகிறது.

**(ii) கட்டுமானப் பிரிவு,**

திட்டங்களை நிறைவேற்றுவது கட்டுமானப் பிரிவின் பொறுப்பாகும்.

**(iii) நில நிருவாகப் பிரிவு**

கையகப்படுத்தப்பட்ட நிலங்களின் மேலாண்மை மற்றும் சந்தைப்படுத்தல், ஒதுக்கீடு நில நிருவாகப் பிரிவின் பொறுப்பாகும்.

**(iv) நிதிப் பிரிவு**

திட்டங்களுக்கான நிதி மேலாண்மை மற்றும் விலை நிர்ணயம் ஆகியவை நிதிப் பிரிவின் பொறுப்பாகும்.

பரப்பு வளர்ச்சிப் பிரிவினால் கையாளப்படும் திட்டங்களின் விவரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன:

### 1.2.3.1 கிளாம்பாக்கத்தில் புதிய புறநகர் பேருந்து முனையம் (New Mofussil Bus Terminus at Kilambakkam)

கோயம்பேடு புறநகர்ப் பேருந்து நிலையத்தில் நிலவும் போக்குவரத்து நெரிசலைக் கருத்தில் கொண்டு சென்னையிலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் பேருந்துகளுக்காக கிளம்பாக்கத்தில் புதிய புறநகர் பேருந்து முனையத்தைக் கட்டுவதற்கு தமிழ்நாடு அரசால் சுமார் 88.52 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு ரூ.417.80 கோடி திருத்திய நிர்வாக ஒப்புதலை அரசு வழங்கியுள்ளது.

இப்பேருந்து முனையமானது சுமார் 44.7 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இரண்டு அடித்தளம், தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய பிரதான முனையக் கட்டடம் சுமார் 60,329 ச.மீ. அளவில் கட்டப்பட்டு வருகிறது. இப்பேருந்து முனையத்தில் சுமார் 324 மகிழுந்துகள் மற்றும் 2,798 இருசக்கர வாகன நிறுத்துமிடம் உருவாக்கப்பட்டுள்ளது. தரை மற்றும் முதல் தளத்தில் பல்நோக்கு கூடம்,

100 கடைகள், உணவகம், பயணச்சீட்டு வழங்குமிடம், போக்குவரத்து அலுவலகம், பொதுமக்கள் தங்குமிடம், கழிப்பிட வசதியுடன் கூடிய பணியாளர்கள் தங்குமிடம் ஆகியவை அமைந்துள்ளன.

இப்பேருந்து நிலையத்தில் 14 ஏக்கர் நிலப்பரப்பில், சுமார் 153 அரசுப் பேருந்துகள், 62 தனியார் சொகுசுப் பேருந்துகள் மற்றும் 50 மாநகரப் பேருந்துகளை நிறுத்தும் வகையிலும், பழுது பார்க்கும் பணிமனை, எரிபொருள் நிரப்புமிடம், துணை மின்நிலையம், மற்றும் கழிவறைகள் ஆகிய வசதிகளுடன் உருவாக்கப்பட்டு வருகிறது. இந்நிலையத்தின் தெற்குப் பகுதியில் தொல்லியல் துறை வரையறைக்குள் உள்ள 16.90 ஏக்கர் நிலத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையிலும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும் பூங்கா உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பேருந்து முனையத்தின் கட்டுமானப் பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

### 1.2.3.2 குத்தம்பாக்கத்தில் புதிய புறநகர் பேருந்து முனையம்(New Mofussil Bus Terminus at Kuthambakkam)

சென்னை மாநகரத்தின் மேற்குப் பகுதியிலிருந்து ஆந்திரா மற்றும் கர்நாடக மாநிலங்களிலிருந்து வரும் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் கோயம்பேடு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் அதிகரித்துக் காணப்படுகிறது. ஆகவே கூட்ட நெரிசலைக் குறைக்கும் பொருட்டு குத்தம்பாக்கத்தில் புதிய புறநகர் பேருந்து முனையத்தைக் கட்டுவதற்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இப்பேருந்து முனையமானது 25 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ. 336 கோடி மதிப்பீட்டில் மாநகரப் பேருந்து நிறுத்தம், புறநகர் பேருந்து நிறுத்தம், பேருந்துகளைப் பராமரிப்பதற்கான பணிமனை, தனியார் பேருந்துகள் நிறுத்தம், இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்தம், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், துணை மின் நிலையம், கடைகள் மற்றும் கழிவறைகள் ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டு வருகிறது.

### 1.2.3.3 செங்கல்பட்டு புதிய பேருந்து நிலையம் (Chengalpet Bus Stand)

செங்கல்பட்டு நகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காகவும், நகரின் எதிர்கால போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், செங்கல்பட்டில் சுமார் 14 ஏக்கர் பரப்பளவில் ரூ.90 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய பேருந்து நிலையம் அமைக்க முன்மொழியப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தயாரிக்கப்பட்டு வருகிறது.

### 1.2.3.4 மாமல்லபுரம் புதிய பேருந்து நிலையம் (Mamallapuram Bus Stand)

மாமல்லபுரத்தில் நெரிசலைக் குறைப்பதற்காகவும், நகரின் எதிர்கால போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், மாமல்லபுரத்தில் சுமார் 6.79 ஏக்கர் பரப்பளவில் ரூ.50 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய பேருந்து நிலையம் அமைக்க முன்மொழியப்பட்டுள்ளது, இதற்கான நில உரிமை மாற்றம் (Land Alienation) செய்வதற்கான

நடவடிக்கைகள் மேற்கோள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தயாரிக்கப்பட்டு வருகிறது.

### 1.2.3.5 கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகம்

சென்னை ஜார்ஜ் டவுன், கொத்தவால் சாவடியில் இருந்த மைய வணிகப் பகுதியில் ஏற்படும் நெரிசலைக் குறைக்க முதலாம் முழுமைத் திட்டத்தின்கீழ் கோயம்பேட்டில் மொத்த விற்பனை அங்காடி வளாகம் 1996-ஆம் ஆண்டு முதல் செயலாக்கத்தில் உள்ளது. இவ்வங்காடி காய், கனி மற்றும் மலர் போன்ற அழுகக்கூடிய பொருட்கள் மற்றும் உணவு தானியங்கள் ஆகியவற்றை மொத்தமாக விற்பனை செய்யும் வகையில் தேவையான அடிப்படை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வங்காடி, 86 ஏக்கர் பரப்பளவில் ஏற்படுத்தப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது. இவ்வங்காடியானது வரையறுக்கப்பட்ட பொருட்களுக்கான அங்காடி

(அமைவிடம் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1996-இன்படி அங்காடி நிருவாகக் குழுவால் நிர்வகிக்கப்படுகிறது.

முதல் கட்டமாக, ரூ.77 கோடி செலவில் 2,358 கடைகள் நிறுவப்பட்டன. இக்கடைகள் 150 சதுர அடியில் இருந்து 2400 சதுர அடி வரையிலான அளவுள்ளதாக அமைக்கப்பட்டது. மேலும், உணவகங்கள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, கழிவறைகள், தபால் நிலையம், குடோன்கள், காவல் நிலையம், தீயணைப்பு சேவை நிலையம், தொலைபேசி நிலையம், குளிர்பதன கிடங்கு (TANFED), வாகன எரிபொருள் நிலையங்கள், லாரிகள் நிறுத்துமிடம் போன்ற பல்வேறு வசதிகள் இவ்வளாகத்தில் உள்ளன. இரண்டாம் கட்டமாக, பழ வியாபாரிகளின் நலனுக்காகக் கூடுதலாக 321 கடைகள் கட்டப்பட்டு ஆக மொத்தம் 3,941 கடைகள் இயங்கி வருகின்றன.

கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தை நவீனப்படுத்துதல் தொடர்பாக கடந்த

2021–2022–ஆம் ஆண்டின் தமிழக அரசின் நிதி நிலையறிக்கையில் அறிவித்ததன் விளைவாக அதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

1. வளாக நுழைவு வாயில் எண்:14 மற்றும் 18–இல் வாகன நுழைவு தடுப்பு அமைக்கப்பட்டு மின்னனு முறையில் இயங்கக்கூடியதாக வடிவமைக்கப்பட்டு செயலாக்கம் பெற்றுள்ளது.
2. வளாகத்தில் முதற்கட்டமாக 10 எண்ணிக்கையிலான நவீன சிறுநீர் கழிப்பிடங்கள், ரூ.45.00 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டுப் பயன்பாட்டில் இருந்து வருகிறது.
3. வளாகத்தில் உள்ள கடைகளுக்கு குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் முந்தைய கட்டுமானங்களில் ஸ்திரதன்மை ஆய்வு செய்யப்பட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளது.

4. வளாகத்தில் அன்றாடம் நிலவும் போக்குவரத்து நெரிசலைச் சீர் செய்யும் பொருட்டு, மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை ஆய்வு செய்யும் வகையில் ஓய்வு பெற்ற வட்டார போக்குவரத்து அலுவலர், காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் வாகன ஆய்வாளர் நிலையில் குழு அமைக்கப்பட்டு அவர்களிடமிருந்தும் அறிக்கை பெறப்பட்டுள்ளது. மேலும், வளாகத்தினை மேம்படுத்துவதற்காக பல்வேறு சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**1.2.3.6 இரும்பு மற்றும் எஃகு அங்காடி, சாத்தாங்காடு**

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால், முதலாம் முழுமைத் திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டபடி, 1991–ஆம் ஆண்டில் எண்ணூர் விரைவுச் சாலைக்கு அருகில் சாத்தங்காட்டில் ரூ.17.00 கோடி திட்ட மதிப்பீட்டில் 203 ஏக்கர் நிலப்பரப்பில் இரும்பு மற்றும் எஃகு அங்காடிதொடங்கப்பட்டது. பொதுத் துறைகளான

SAIL, VSP, IOCL மற்றும் HPCL ஆகியவை இத்திட்டத்தில் ஒதுக்கீடு பெற்று 50.72 ஏக்கர் பரப்பளவில் நிறுவப்பட்டு கடந்த 30 ஆண்டுகளாக செயல்பாட்டில் உள்ளது. மீதமுள்ள 152.28 ஏக்கர் நிலப்பரப்பில் வெவ்வேறு அளவுகளில் 850 மனைகள் மேம்படுத்தப்பட்டன. இதுவரை, 719 மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன, மேலும் 131 மனைகளை ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒதுக்கீடு செய்யப்பட்ட 719 மனைகளில், 535 ஒதுக்கீடுதாரர்கள் அங்காடி நிர்வாகக் குழுவில் பதிவு செய்து இரும்பு மற்றும் எஃகு மொத்த விற்பனைக்கான உரிமம் பெற்றுள்ளனர். இவ்வங்காடியானது சென்ட்ரல் இரயில் நிலையம் மற்றும் எழும்பூர் ரயில் நிலையங்கள் மற்றும் எண்ணூர் துறைமுகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தண்டையார்பேட்டை ரயில் நிலையத்திலிருந்து சந்தைக்குள் செல்லும் இரயில் பாதை இணைப்பானது, SAIL, VSP மற்றும் சில நிறுவனங்களுக்கு பிலாய், ரூர்கேலா போன்ற உற்பத்தி ஆலைகளில் இருந்து

இரும்பு மற்றும் எஃகு கொண்டு வருவதற்குப் பெருமளவில் உதவியாக உள்ளது.

இவ்வங்காடியை நிர்வகிக்க அரசாணை எண்.91, நாள் 12.06.2009–இன்படி வரையறுக்கப்பட்ட பொருட்களின் அங்காடி (இருப்பிடத்தை முறைப்படுத்துதல்) சட்டம் 1996 (தமிழ்நாடு சட்டம் 24, 1996) பிரிவு 5(1) இன் கீழ் அங்காடி நிர்வாகக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர்–செயலர் அவர்களைத் தலைவராகக் கொண்டு அங்காடி நிர்வாகக் குழு செயல்படுகிறது. மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் உள்ள அலுவலர் முதன்மை நிர்வாக அலுவலராக அங்காடியை நிர்வகிக்கிறார்.

மேலும் குழாய்கள் மூலம் அனைத்து ஒதுக்கீடுதாரர்களுக்கும் தண்ணீர் வசதி வழங்குதல். கட்டணமில்லாக் கழிப்பிடம், குளியலறை வசதிகள், மின்சாரம், தெரு விளக்கு, உயர் கோபுர விளக்கு வசதிகள், இதர மின்சாதனங்கள் பொருத்துதல் மற்றும்

பராமரித்தல். போக்குவரத்தை வரன்முறைப்படுத்துதல் உரிய பாதுகாப்புப் பணிகள், சாலை மற்றும் மழைநீர் வடிகால்களைப் பராமரித்தல் போன்ற சேவைகள் அங்காடி நிர்வாகக் குழு மூலம் செயல்படுத்தப்படுகின்றன. வியாபாரிகளின் வசதிக்காகவும் வியாபாரத்தை மேம்படுத்தவும் அரசாங்கம் வழிவகை செய்து வருகிறது.

### 1.2.3.7 பெரிய பரப்பளவிலுள்ள திறந்தவெளிப் பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களை மேம்படுத்துதல்

1971–ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தின்படி, பன்னடுக்குமாடிக் கட்டடங்கள், மனைப்பிரிவுகள் மற்றும் பெரிய அளவிலான நிலங்களில் சிறப்புக் கட்டடங்களுக்கான திட்ட அனுமதிகள் வழங்கும்போது, 10% திறந்த வெளி இட ஒதுக்கீடு, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு தானமாக வழங்கப்பட வேண்டும்.

அதன்படி, 2002–ஆம் ஆண்டு முதல் இதுவரை 626 திறந்த வெளி இடங்கள் 346 ஏக்கர் பரப்பளவில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் தானமாக

பெறப்பட்டுள்ளன. இவற்றில் 403 திறந்த வெளி இடங்கள் அமைந்துள்ள 227 ஏக்கர் நிலம் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 223 திறந்த வெளி இடங்களை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2021-22-ஆம் நிதியாண்டில் கிளாம்பாக்கம் மற்றும் போரூரில் பெரிய திறந்தவெளிப் பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களை மேம்படுத்துவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டு, ரூ.30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**அ) கிளாம்பாக்கத்தில் திறந்தவெளி பூங்கா மேம்படுத்துதல்**

புதிய கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தை ஒட்டி அமைந்துள்ள திறந்த வெளியிடத்தில் **"காலநிலைப் பூங்கா மற்றும் தொல்பொருள் விளக்கப் பூங்கா"** அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திறந்த வெளியிடத்தில் 16.9 ஏக்கர் பரப்பளவில் பொதுப் பூங்கா மற்றும் விளையாட்டு

மைதானம் மேம்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டம் ரூ.14.98 கோடி மதிப்பீட்டில் காலநிலைப் பூங்கா, தொல்லியல் விளக்கப் பூங்கா, பூர்வீக நிலப்பரப்புகள், நீல-பச்சை உட்கட்டமைப்பு, நகர்ப்புற சதுப்புநிலப் பூங்கா, இயற்கை சார்ந்த பொழுதுபோக்கு, மரபுசார்ந்த பல்லுயிர் அமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் கல்வி, நகர்ப்புற உள்கட்டமைப்பு, சமூக வசதி போன்ற திட்டக் கூறுகளுடன் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் 272–ஆவது குழுமக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**ஆ) போரூரில் திறந்தவெளிப் பூங்கா மேம்படுத்துதல்**

போரூரில் உள்ள திறந்தவெளியிடமானது, 16.63 ஏக்கர் பரப்பளவில் பெருநகர சென்னை மாநகராட்சியின் வளசரவாக்கம் மண்டலத்தில் உள்ள இராமச்சந்திரா மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. இத்திறந்த

வெளியிடத்தில், நீர் உறிஞ்சிப் பூங்கா (Sponge Park), பூர்வீக நிலப்பரப்புகள், நீல–பச்சை உட்கட்டமைப்பு, இயற்கை சார்ந்த பொழுதுபோக்கு, மரபு சார்ந்த பல்லுயிர் அமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் கல்வி, மின்னனு தகவல் மையம், நகர்ப்புற உள்கட்டமைப்பு, சமூக வசதி போன்ற திட்டக் கூறுகளுடன் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்த சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் 272–ஆவது குழுமக் கூட்டத்தில் ரூ.16.60 கோடி ஒப்புதல் அளித்துள்ளது.

### 1.2.3.8 கட்டுமானப் பிரிவு

1983–ஆம் ஆண்டு பரப்பு வளர்ச்சிப் பிரிவால் உருவாக்கப்பட்ட உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்வதற்காக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் கட்டுமானப் பிரிவானது உருவாக்கப்பட்டது. இப்பிரிவு கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகம்,

புரட்சித் தலைவர் டாக்டர்.எம்.ஜி.ஆர் பேருந்து முனையம் (முன்னர் சி.எம்.பி.டி. என அழைக்கப்பட்டது), அலுவலக வளாகக் கட்டடங்கள் (I, II & III), சாத்தங்காடில் இரும்பு மற்றும் எஃகு அங்காடி வளாகம், மாதவரம் பேருந்து மற்றும் கனரக ஊர்தி முனையம் போன்ற முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்கள், மறைமலை நகர், மணலி புதுநகரம், சென்னை ஒப்பந்தப் பேருந்து நிலையம், போன்ற வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்தி உள்ளது.

### 1.2.4 பரப்பு திட்டப் பிரிவு (Area Plans Unit)

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் பரப்பு திட்டப் பிரிவு, சென்னை பெருநகரத் திட்டமிடல் பகுதியில் மேம்பாடுகளை (கட்டிடங்கள் மற்றும் மனைப்பிரிவுகள்) ஒழுங்குபடுத்துவற்காக, முழுமைத் திட்டம் அல்லது விரிவான வளர்ச்சித் திட்டத்தின்படி அங்கீகரிக்கப்பட்ட நில பயன்பாடு மற்றும் வளர்ச்சி விதிமுறைகளைச் அமலாக்கம் செய்கிறது. தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971–இன் 49–ஆம் பிரிவின் கீழ் அதிகாரத்தைப் பெற்று, தற்போதுள்ள

தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள்(TNCD&BR), 2019 இன் கீழ், கட்டடங்கள், மனைப்பிரிவுகள் மற்றும் மனை உட்பிரிவுக்கான திட்ட அனுமதியை வழங்குவதன் மூலம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் வளர்ச்சியை ஒழுங்குபடுத்துகிறது.

உயரம் குறைந்த கட்டடங்கள் (Non High Rise Buildings), பன்னடுக்குமாடி கட்டடங்கள் (High Rise Buildings), தொழிற்சாலை (Industrial) மற்றும் நிறுவனக் கட்டடங்கள் (Institutional), மனைப்பிரிவுகள்(Layouts)/ மனை உட்பிரிவுகளுக்கான (Sub–Divisions) திட்ட அனுமதி மற்றும் நில உபயோக மாறுபாடு (Re–classification) ஆகியவற்றுக்கான விண்ணப்பங்களை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஏற்றுக்கொண்டு அதனை பரிசீலித்து அனுமதி வழங்குகிறது.

பன்னடுக்குமாடி கட்டடங்களைப் பொறுத்தவரை, திட்ட அனுமதி விண்ணப்பங்கள் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் பகுப்பாய்வு

செய்யப்பட்டு MSB குழு (Multi Storyed Buildings Committee) மற்றும் HRB குழு (High Rise Buildings Committee) குழுவின் முன் வைக்கப்படும். HRB குழுவின் பரிந்துரைக்கேற்ப, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் திட்ட அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

அரசின் ஆணைகளுக்கிணங்க, உயரம் குறைந்த கட்டடங்கள், குறிப்பிட்ட வகை தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனக் கட்டடங்கள், மனைப்பிரிவு மற்றும் மனை உட்பிரிவு (கட்டுப்படுத்தப்பட்ட பகுதியுடன்) போன்ற சிறிய மேம்பாடுகளுக்குத் திட்ட அனுமதி வழங்குவதற்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தனது அதிகாரங்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளித்துள்ளது.

முதலாம் முழுமைத் திட்டத்தின் வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளின் (Development Control Rules) கீழ், சிறப்பு வகைக் கட்டடத்திற்கு அனுமதிக்கப்பட்ட தளப்பரப்பு குறியீடு 1.50 மற்றும் பன்னடுக்கு மாடி கட்டடத்திற்குத் தளப்பரப்பு குறியீடு 2.00 முதல் 2.50 வரை வழங்கப்பட்டது. இதேபோல், இரண்டாம்

முழுமைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வளர்ச்சி விதிமுறைகளின் (Development Regulations) கீழ், சிறப்பு கட்டடத்திற்கான அனுமதிக்கப்பட்ட தளப்பரப்பு குறியீட்டு அளவில் மாற்றம் ஏதுமில்லை எனினும் பன்னடுக்கு மாடி கட்டடத்திற்கு (MSB) தளப்பரப்பு குறியீடு 1.5 முதல் 2.5 வரை வழங்கப்பட்டது. தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள் (TNCD&BR) 2019 இல், அனுமதிக்கப்பட்ட தளப்பரப்பு குறியீடு உயரம் குறைந்த கட்டடங்களுக்கு (NHRB) 2.00 ஆகவும், உயரமான கட்டடத்திற்கு (HRB) 2.50 முதல் 3.25 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

### 1.2.4.1 இணையவழி திட்ட அனுமதி வழங்குதல்

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஒற்றை சாளர முறை அடிப்படையில் இணைய வழி திட்ட அனுமதி மென்பொருளை உருவாக்கி, அதில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள், 2019–இன்படி, 2022–ஆம் ஆண்டு மே மாதம் முதல் பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த இணைய வழி திட்ட அனுமதி

வசதியின் மூலம் அனைத்துத் திட்ட அனுமதி விண்ணப்பங்களையும் இணைய வழியாகச் சமர்ப்பிக்கவும், வரைபடங்களை விதிகளின்படி சரி பார்த்துக்கொள்ளவும் மற்றும் பல்வேறு கட்டணங்களைச் செலுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்களுடைய திட்ட அனுமதி விண்ணப்பங்களின் நிலையினை இணையதளம் வாயிலாக அவ்வப்போது தெரிந்துகொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது திட்ட அனுமதி விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பது முதல் திட்ட அனுமதி வழங்கும் வரை முற்றிலுமாக இணைய வழி வாயிலாக மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பிற துறைகளின் தடையின்மைச் சான்றுகளைப் பெறுவதற்கு ஏதுவாக சம்மந்தப்பட்ட துறைகளுடன் இணைய வழி மூலம் ஒருங்கிணைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் திட்ட அனுமதி சார்ந்த அனைத்துக் கடிதங்களும், ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடமும்

சம்பந்தப்பட்ட கட்டட வல்லுநர் மற்றும் அதிகாரிகளின் மின் கையொப்பமிட்டு விரைவாக அனுப்பப்படுகிறது.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் பதிவு செய்யப்பட்ட கட்டட வல்லுநர்கள், கட்டட பொறியாளர்கள் மற்றும் மேம்பாட்டாளர்கள் ஆகியோருக்கு திட்ட அனுமதி விண்ணப்பம் இணையதளம் வாயிலாக சமர்ப்பிப்பது, கையாளுவது சம்பந்தமாக பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டன. மேலும் இத்திட்டம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திடப் பல்வேறு நேர்முக பயிற்சிகளும் கலந்துரையாடல்களும் நடத்தப்பட்டுள்ளன.

இந்த ஒற்றைச் சாளர மென்பொருள் செயல்படுத்தப்பட்ட 2022–ஆம் ஆண்டு, முதற்கொண்டு சிறந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. திட்ட அனுமதி வழங்கும் முறையினை எளிதாக்குவதற்கு மேற் கொள்ளப்பட்ட அரசின் சீரிய முயற்சிகளின் மூலமும் பல்வேறு பொது விழிப்புணர்வுப் பயிற்சிகள் மூலமும் இணைய வழித் திட்ட அனுமதி வழங்கும் முறை வரவேற்பும், வளர்ச்சியும் அடைந்துள்ளது.

### 1.2.4.2 மாற்றத்தக்க வளர்ச்சி உரிமைகள் (Transferable Development Rights)

சென்னைப் பெருநகரப் பகுதிக்கான இரண்டாம் முழுமைத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட, திட்டங்களில் மாற்றத்தக்க வளர்ச்சி உரிமை (Transferable Development Rights) எனும் புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தி சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் செயல்படுத்தி வருகிறது. தற்போது இந்த மாற்றத்தக்க வளர்ச்சி உரிமை (TDR) திட்டத்தின் படி, சாலை விரிவாக்கம், புதிதாக சாலை அமைத்தல் மற்றும் உட்கட்டமைப்பு வளர்ச்சி உள்ளிட்டவைகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. இதன்படி, சாலை விரிவாக்க திட்டதிற்காக 135 ஏக்கர் நிலம் சம்பந்தப்பட்ட நில உடைமையாளர்களிடமிருந்து திட்ட அனுமதி வழங்கும்போது தானமாக பெறப்பட்டுள்ளது. இதற்குப் ஈடாக, வளர்ச்சி உரிமைச் சான்றிதழ் கோரி விண்ணப்பித்த நில உடைமையாளர்களுக்கு 110 வளர்ச்சி உரிமைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், குடிசைப் பகுதிகளை மேம்படுத்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு 44 சிறப்பு வளர்ச்சி உரிமைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது.

### 1.2.4.3 அமலாக்கப் பிரிவு

தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் ஊரமைப்புச் சட்டம் 1971, பிரிவு 56 மற்றும் 57–இன் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அமலாக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. அமலாக்கப் பிரிவின் செயல்பாடுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

i. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், வழங்கிய திட்ட அனுமதியின் படி கட்டப்பட்ட கட்டடங்களுக்கு மட்டுமே அமலாக்க நடவடிக்கையை மேற்கொள்கிறது.

ii. சென்னைப் பெருநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அனைத்து வகையான கட்டடங்களின் மீதும் அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்களைப் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் பகிர்ந்தளித்துள்ளது.

iii. திட்ட அனுமதி பெற்று கட்டிய கட்டடத்திற்கான பணிநிறைவுச் சான்றுக்கான விதிமுறைகள் மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த கட்டட விதிகளைப் பயன்படுத்தி பணிநிறைவுச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

iv. திட்ட அனுமதியற்ற மற்றும் அனுமதிக்குப் புறம்பாக கட்டப்பட்ட கட்டடங்களுக்கு இடிப்பதற்கான அறிவிப்பு வழங்குதல், பூட்டுதல் மற்றும் முத்திரை வைத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

**1.2.5 வரன்முறைத் திட்டப் பிரிவு (Regularization Unit)**

**அ) அங்கீகரிக்கப்படாத/விதி மீறிய கட்டடங்களை வரன்முறைப் படுத்துதல்**

தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971 பிரிவு 113–A–இன் கீழ் அங்கீகரிக்கப்படாத / விதி மீறிய கட்டடங்களை வரன்முறைப்படுத்துவதற்காக 28–02–1999–க்கு முன் கட்டப்பட்ட கட்டடங்களுக்கு வரன்முறைப்படுத்தும் திட்டத்தை தமிழ்நாடு அரசு அறிவித்தது. இதுவரை 327 கட்டடங்களுக்கு

வரன்முறை செய்து ஒப்புதல் அளிக்கப்பட்டு, ரூ.359.15 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971–ன் பிரிவு 113–C இன் கீழ் மற்றொரு வரன்முறைப்படுத்துதல் திட்டம் 01.07.2007 வரை கட்டப்பட்ட அங்கீகரிக்கப்படாத கட்டடங்களை வரன்முறைப் படுத்துவதற்காக ஜூன், 2017 அன்று அறிவிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவில், மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தின் ஆணையின்படி சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் விண்ணப்பங்களைப் பெற்று ஆய்வு செய்யலாம் எனவும், ஆனால் நீதிமன்றத்தின் மறு உத்தரவு வரும் வரை இறுதி உத்தரவுகளை வழங்கக் கூடாது எனவும் உத்தரவிட்டது. அதன்படி, இத்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட விண்ணப்பங்களை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆய்வு செய்து வருகிறது. இதுவரை, 2,808 விண்ணப்பங்களும் வரன்முறைப்படுத்துதல் கட்டணமாக ரூ.35.65 கோடியும் பெறப்பட்டுள்ளது.

**ஆ) அங்கீகரிக்கப்படாத மனைகள் / மனைப் பிரிவு ஆகியவற்றை வரன்முறைப்படுத்தும் திட்டம்–2017**

தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971 சட்டம் (35/1972) பிரிவு 113–இன் கீழ் அனுமதியற்ற மனை/மனைப் பிரிவுகைளை வரன்முறைப் படுத்துவதற்கு ஏதுவாக அனுமதியற்ற மனை/மனைப் பிரிவுகள் வரன்முறைப்படுத்தும் விதிகள், 2017 உருவாக்கப்பட்டன. 20.10.2016–க்கு முன் வாங்கப்பட்ட மனை / விற்கப்பட்ட மனைகளின் உரிமையாளர்கள் இத்திட்டத்தின் மூலம் தகுதி பெறுவதற்கும் நிகழ்நிலை வாயிலாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தனிப்பட்ட மனைகளை வரன்முறை செய்யும்பொழுது, திறந்தவெளி ஒதுக்கீடுக்கு ஈடான தொகை செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்தும் போது விற்பனையாகாமல் உள்ள மீதி மனைகளுக்கு மட்டுமே 10% திறந்தவெளி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

மனைப்பிரிவு/மனைகள் முழுமைத்திட்டத்தில் வேறு எந்த விதமான நிலப் பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்தாலும், வரன்முறைப் படுத்தும் பொழுது குடியிருப்பு உபயோகத்திற்கு மட்டுமே வரன்முறை செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின்படி விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை இணையதளம் மூலம் சமர்ப்பிக்க வேண்டும். உள்ளாட்சி அமைப்புகள் உரிய ஆய்வு அறிக்கையுடன் விண்ணப்பங்களை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு ஒப்புதல் வேண்டி மேல்நடவடிக்கைக்காக சமர்ப்பிக்க வேண்டும். சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சம்பந்தப்பட்ட மனைப்பிரிவுளுக்குக் கொள்கை ரீதியான (In Principle) அனுமதி அளித்த பின்பு, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு தொடர் நடவடிக்கை எடுக்க அனுப்பி வைக்கப்படும்.

சென்னைப் பெருநகர் பகுதியில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட அங்கீகரிக்கப்படாத மனை மற்றும் மனைப் பிரிவுகளுக்கான விண்ணப்பங்களைப் பரிசீலித்து 6,303 மனைப் பிரிவுகளுக்கு கொள்கை ரீதியான மற்றும் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

### 1.2.6 சாலை மற்றும் இரயில் பிரிவு (Road and Rail Unit)

#### 1.2.6.1 பழைய மாமல்லபுரம் சாலை (OMR) மற்றும் கிழக்கு கடற்கரை சாலை (ECR) இடையேயான சாலை இணைப்பை மேம்படுத்துதல்

பழைய மாமல்லபுரம் சாலை (OMR) மற்றும் கிழக்குக் கடற்கரை சாலை (ECR) இடையேயான சாலை இணைப்பை அடையாளம் கண்டு திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்காக, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் ஒரு கலந்தாலோசகர் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் பல்வேறு அளவுகோல்களின் அடிப்படையில் ஆறு இணைப்புகள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றில் கண்ணகி நகர் – ஈஞ்சம்பாக்கம் இடையே உள்ள இணைப்பை

நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது. மேலும் ஆலோசித்ததில், பக்கிங்ஹாம் கால்வாயின் இருபுறமும் சாலைகள் அமைத்து, மூன்று இடங்களில் சாலைகளை ஒன்றாக இணைத்து, பக்கிங்ஹாம் கால்வாயின் கரைகளைப் பலப்படுத்தி ஒருங்கிணைந்த முறையில் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

மாநில நெடுஞ்சாலைத் துறையுடன் இணைந்து, திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும். மேலும், இந்தத் திட்டத்திற்காக, தலைமைப் பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை (மெட்ரோ), மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், இயக்குநர், சுற்றுச்சூழல் துறை, தலைமைப் பொறியாளர், நீர்வளத் துறை, சென்னை ஆகியோர் அடங்கிய தொழில்நுட்ப குழு அமைத்து அரசாணை (நிலை) எண்.44, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 05.04.2023–இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

### 1.2.6.2 வெளிவட்டச் சாலையின் கிழக்கு எல்லையை ஒட்டிய 50 மீட்டர் நிலப்பரப்பில் திட்டங்களை மேம்படுத்துதல்

வெளிவட்டச் சாலையின் கிழக்கு பகுதியை ஒட்டியுள்ள 50 மீட்டர் நிலப்பரப்பையும் அதைச் சுற்றியுள்ள மற்ற நிலங்களையும் உகந்த முறையில் பயன்படுத்துவதற்காக சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மேம்படுத்தப்படும் என்று 2021–22–ஆம் நிதியாண்டில் அரசால் அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மற்றும் பிற துறைகள் மூலம் சாத்தியக்கூறு ஆய்வு அடிப்படையில் பல்வேறு திட்டங்கள் உருவாக்க முன்மொழியப்பட்டு வருகிறது. தற்போது, வெளிவட்டச் சாலையின் மேம்பாட்டுடன் பல்வேறு திட்டங்களைப் படிப்படியாக நடைமுறைப்படுத்த சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் திட்டமிட்டுள்ளது.

### 1.2.6.3 வெளிவட்டச் சாலைக்கான முழுமைத் திட்டம்

வெளிவட்டச் சாலையை ஒட்டி அமைந்துள்ள நிலங்களில் ஒரு நிலையான உயர்–அடர்த்தி பாதையாக (Sustainable High Density Corridor) நெறிப்படுத்த, வெளிவட்டச் சாலையின் இருபுறமும் 1 கிமீ பரப்பளவிற்கு முழுமைத்திட்டம் தயாரிக்கப்படும். இந்தத் திட்டம் எதிர்கால வளர்ச்சியை எதிர்கொள்ள வெளிவட்டச் சாலையுடன் இணைந்து நிலச்சேர்மம் திட்டங்கள் மற்றும் சாலை வலைப்பின்னல் அமைப்பு திட்டங்களுக்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து அதற்கான அடித்தளத்தை அமைக்கும்.

### 1.2.6.4 வெளிவட்டச் சாலை வளர்ச்சிப் பாதைக்கான சிறப்புப் நோக்கு நிறுவனம்

வெளிவட்டச் சாலையை நிர்வகிப்பதற்கும், வெளிவட்டச் சாலையை ஒட்டி முன்மொழியப்பட்ட திட்டங்கள் மற்றும் மேம்பாடுகளை நிர்வகிப்பதற்கும், அத்திட்டங்களுக்கான வருவாய் மற்றும் செலவினங்களில் கவனம் செலுத்துவதற்கும், மற்ற துறைகளுடன் ஒருங்கிணைப்பதற்கும், ஒரு சிறப்புப் நோக்கு நிறுவனம் (Special Purpose Vehicle) உருவாக்கப்படும்.

### 1.2.6.5 சென்னை பெருந்திரள் விரைவு போக்குவரத்து அமைப்பு (MRTS) – நிலை II – விரிவாக்கம்

வேளச்சேரி முதல் புனித தோமையார் மலை வரை சுமார் 5 கி.மீ. நீளத்திற்கு ரூ.732.89 கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கான இரண்டாம் கட்ட விரிவாக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக தென்னக ரயில்வேக்கு தமிழக அரசு தனது பங்காக ரூ.488.62 கோடியை விடுவித்துள்ளது. இந்தத் திட்டம் 2023 டிசம்பர் மாதத்திற்குள் முடிக்கப்பட்டு செயல்பாட்டிற்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### 1.2.6.6 மத்திய சதுக்கம் மேம்பாடு

மத்திய சதுக்கமானது ரிப்பன் மாளிகை, விக்டோரியா பப்ளிக் ஹால், சென்னை பூங்கா ரயில் நிலையம், சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம், தென்னக ரயில்வே தலைமையக் கட்டடம், சென்னை மருத்துவக் கல்லூரி, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, பார்க்டவுன் ரயில் நிலையம், மற்றும் இராமசாமி முதலியார் சத்திரம் போன்ற சென்னை நகரின் முக்கிய அடையாளங்களுக்கிடையே உள்ள

பகுதியை உள்ளடக்கி, சென்னை சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தின் இடத்தில், பல்வேறு போக்குவரத்து முறைகளுக்கு இடையே பயணிகளின் தடையற்ற இயக்கத்தை உறுதி செய்வதற்காக உருவாக்கப்பட்டது.

மத்திய சதுக்கத்தின் முக்கிய அம்சங்களில், இடைவழி இணைப்பு (Inter Model Connectivity), சுரங்கப்பாதைகள் மூலம் இணைப்பு, பேருந்து நிறுத்துமிடங்கள் அமைத்தல், வாகன நிறுத்துமிட வசதிகள், பாரம்பரிய கட்டடங்களைப் பாதுகாத்தல், ஸ்டான்லி சாலை மற்றும் ஈ.வெ.ரா பெரியார் சாலை பாலத்தைப் புணரமைத்தல் போன்றவை அடங்கும். இத்திட்டத்தினைத் திறம்படச் செயல்படுத்த சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ரூ.120.03 கோடி நிதி வழங்கியுள்ளது.

### 1.2.6.7 சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் பிற உள்கட்டமைப்பு திட்டங்கள்

பாதசாரிகளின் போக்குவரத்திற்குத் தடையற்ற இணைப்பை ஏற்படுத்தவும், ஆலந்தூர் மெட்ரோ நிலையத்திற்கு இணைப்பினை உருவாக்கவும்

ஆலந்தூரில் நடைமேம்பாலம் அமைக்க சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ரூ.3.70 கோடி நிதி அளித்துள்ளது. மேலும், சென்னைப் பெருநகர் பரப்பில் ஒருங்கிணைந்த போக்குவரத்துத் திட்டம் தயாரிக்க ரூ.2.12 கோடி நிதி வழங்கியுள்ளது. இந்நிதியுதவி மட்டுமின்றி கிண்டி கத்திப்பாராவில் நகர்ப்புற சதுக்கம் (Urban Square) திட்டத்தைச் செயல்படுத்தவும், ஷெனாய் நகர் மெட்ரோ நிலையத்தைச் சுற்றியுள்ள ஷெனாய் நகர் பூங்காவை மேம்படுத்த சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் நிதியுதவி அளிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

## 1.3 புதிய முயற்சிகள்

### 1.3.1 சென்னை கடற்கரை மறுசீரமைப்பு மற்றும் புத்துயிரூட்டல் (CSRR)

அரசாணை (நிலை) எண்.146, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 25.07.2022 மூலமாக சென்னை கடற்கரை மறுசீரமைப்பு மற்றும் புத்துயிரூட்டல் திட்டத்தை (மெரினா முதல் கோவளம் வரை) சுமார் 30 கி.மீ தூரத்திற்கு ரூ.100 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்

குழுமத்தால் செயல்படுத்தப்படும் என அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்திற்கான விரிவான கடற்கரை மேம்பாட்டுத் திட்டத்தை (Comprehensive Shoreline Development Plan) தயாரிக்கும் பணியானது உலக வங்கி நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ளது. விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு ஒரு ஆலோசகரை நியமிப்பதற்காக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு முடிவு செய்யும் நிலையில் உள்ளது. சென்னை கடற்கரை மேம்பாட்டுத் திட்டம் என்பது சென்னைக்கான மூன்றாவது முழுமைத் திட்டத்தின் துணைத் திட்டமாக இருக்கும். இக்கடற்கரை பகுதி தற்போதுள்ள சூழ்நிலைகள், பயனாளிகள் செயல்பாடு, கடற்கரை மேம்பாட்டு ஒழுங்குமுறை மற்றும் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் ஆகியவற்றின் அடிப்படையில் பல்வேறு மண்டலங்களாக பிரிக்கப்படும். மேலும், இந்த ஆய்விலிருந்து அடையாளம் காணப்பட்ட திட்டங்களைத் திட்டமிடுதல், செயல்படுத்துதல், இயக்குதல் மற்றும் பராமரித்தல் போன்ற பணிகளுக்காக

ஒரு பிரத்தியேக நிருவாக அமைப்பைக் கொண்ட ஒரு சிறப்புப் நோக்கு நிறுவனம் (Special Purpose Vehicle) அமைக்க அரசாணை (நிலை) எண்.25, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 15.02.2023 வாயிலாக அரசு ஆணையிட்டுள்ளது.

**1.3.2 சென்னை பெருநகரப் பகுதியில் ஏரிக்கரை மற்றும் நீர்முனை மேம்பாடு**

சென்னைப் பெருநகரப் பகுதிக்குட்பட்ட ஏரிக்கரை மற்றும் நீர்முனை மேம்பாட்டிற்கான ஆணையினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசாணை (நிலை) எண்.8, நாள் 12.01.2023–இன் மூலம் அரசு வெளியிட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பு ரூ.100 கோடி ஆகும். இத்திட்டம், பெரும்பாக்கம், ரெட்டேரி, முடிச்சூர், மாடம்பாக்கம், செம்பாக்கம், அயனம்பாக்கம், வேளச்சேரி, ஆதம்பாக்கம், புழல் மற்றும் கொளத்தூர் ஆகிய ஏரிகளைப் பாதுகாப்பதற்கும், அவற்றைப் பாதுகாப்பதற்காக திறன்மிக்க உத்திகளைப் பயன்படுத்தி, பொழுதுபோக்கிற்குத் தகுந்த சமூக உட்கட்டமைப்பை வழங்குவதன் மூலம், அவற்றை

செயல்மிக்க பொது இடங்களாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமமும் நீர்வளத்துறையும் இணைந்து இத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏரிகளை மேம்படுத்தும். ஏரிமுகப்பு வடிவமைப்பிற்கான போட்டிக்குறிப்பு 17.03.2023 அன்று செய்தித்தாள் வாயிலாக வெளியிடப்பட்டுள்ளது.

**1.3.3 நிலச் சேர்மப் பகுதி வளர்ச்சித் திட்டம்**

இந்திய அரசு, பெருநகரங்களுக்குள் வளர்ச்சியடையாத பகுதிகளுக்கான நகரத் திட்டமிடலுக்கான பணியை ஒரு வெற்றிகரமான பசுமைத் திட்டமாக அடையாளம் கண்டுள்ளது. இத்திட்டம் நிலச் சேர்ம வளர்ச்சித் திட்டத்தைப் போன்றதாகும். இந்தத் திட்டங்களைத் தயாரிப்பதற்காக நகரங்களின் திறனைக் கட்டமைப்பதற்காக அம்ருத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு நகரத்திற்கும் ரூபாய் ஒரு கோடி மானியம் ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு முன்மாதிரி நகர திட்டமிடல் திட்டத்தைத் தயாரிப்பதற்காக

ரூபாய் 1.00 கோடி மானியம் வழங்க ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு இதுவரை ரூ.60.00 லட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தென் சென்னைப் பகுதியில் அமைந்துள்ள அகரம்தென், கோவிலஞ்சேரி மற்றும் மாடம்பாக்கம் கிராமத்தில் 600 ஏக்கர் பரப்பளவில் நில சேர்மப் பகுதி வளர்ச்சித் திட்டத்தைத் தயாரித்து வருகிறது. நில சேகரிப்புப் பகுதி வளர்ச்சித் திட்டத்திற்காக தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971–இல் சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**1.3.4 சென்னையின் தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கியப் போக்குவரத்து வழித்தடங்களை ஒட்டி அமைந்துள்ள பகுதிகளுக்குத் தளப்பரப்புக் குறியீடு (Floor Space Index) அதிகரிக்கப்படும்.**

மெட்ரோ இரயில் வழித்தடங்கள் மற்றும் பிரதான சாலைகளை ஒட்டிய பகுதிகளில் தளப்பரப்பு குறியீட்டை அதிகப்படுத்துதல் மூலமாக நெருக்கமான மற்றும் அடர்த்தியான வளர்ச்சியை ஊக்குவிக்க

உத்தேசிக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் கலப்பு உபயோக (Mixed Usage) பகுதிகள் மற்றும் பொதுப் போக்குவரத்துப் பயன்பாட்டை ஊக்குவிப்பதுடன் நீண்ட தினசரி பயணங்கள், தனியார் வாகனங்களின் பயன்பாடு, நெரிசல் மற்றும் சுற்றுச் சூழல் பாதிப்பு போன்றவற்றைக் குறைக்கும் விதமாகத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 1.3.5 இளநிலை திட்டமிடல் (B. Plan) பாடத்திட்டம்

நகரத் திட்டமிடுபவர்களுக்கான தேவையைப் பூர்த்தி செய்யும் முயற்சியில், நகரமயமாக்கல் அதிகரித்துள்ள நிலையில், நிதி ஆயோக்கின் (NITI Aayog) பரிந்துரைகளின் அடிப்படையில், அண்ணா பல்கலைக்கழகம், 2022–23–ஆம் ஆண்டிற்கான கல்வியாண்டில் தமிழ்நாட்டில் முதன்முறையாக திட்டமிடலில் இளநிலை திட்டமிடல் (B. Plan) பட்டப்படிப்பைத் தொடங்கியுள்ளது. இளநிலை திட்டமிடல் (B. Plan) பட்டதாரிகள் சிறந்த எதிர்கால நகரங்களை வடிவமைப்பதற்கும், தமிழ்நாட்டில் மிகவும்

சீரான நகரமயமாக்கல் செயல்முறைக்கும் பங்களிப்பார்கள். அதிகரித்து வரும் நகரமயமாக்கல் மற்றும் ஸ்மார்ட் சிட்டி திட்டங்களால், இளநிலை திட்டமிடல் பட்டதாரிகளுக்கு மிகுதியான தொழில் வாய்ப்புகள் இருக்கும்.

அரசாணை (நிலை) எண். 156, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 23.08.2022–இன்படி சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்ககம் (DTCP) ஆகியவை அண்ணா பல்கலைக்கழகத்திற்கு 80:20 என்ற விகிதத்தில் இளநிலை திட்டமிடல் படிப்புக்குத் தேவையான நிதியை வழங்கும். இதன்படி சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆரம்ப தொகையாக ரூ.8.00 கோடியை அண்ணா பல்கலைக்கழகத்திற்கு வழங்கியுள்ளது. இளநிலை திட்டமிடல் பாடத்திட்டம் 28.10.2022 அன்று தொடங்கி 36 மாணவர்கள் இளநிலை திட்டமிடல் பாடத்திட்டத்தில் சேர்ந்துள்ளனர்.

**1.3.6 காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்கள் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள அரக்கோணம் தாலுகா ஆகியவற்றின் வளர்ச்சிக்காக ரூ.100 கோடி உள்கட்டமைப்பு நிதியுதவி**

சென்னைப் பெருநகரப் பகுதியின் விரிவாக்கத்தில் காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களின் பகுதிகளும், ராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள அரக்கோணம் தாலுகாவும் அடங்கும். இந்த விரிவாக்கப்பட்ட பகுதியில் வளர்ச்சியைக் கொண்டுவரும் பொறுப்பு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடம் உள்ளது. இந்தப் பகுதிகளின் அனைத்துத் துறை வளர்ச்சியையும் முன்னெடுத்துச் செல்ல, இந்தப் பகுதிகளில் சாலைகள், பாலங்கள், பூங்கா உள்ளிட்ட பொழுதுபோக்கு வசதிகள், விளையாட்டு மைதானம் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டியது அவசியம். இதற்காக, மாவட்ட வாரியாக

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் பின்வருமாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1. காஞ்சிபுரம் மாவட்டம் – ரூ.35 கோடி,
2. செங்கல்பட்டு மாவட்டம் – ரூ.32 கோடி,.
3. திருவள்ளூர் மாவட்டம் – ரூ.25 கோடி
4. ராணிப்பேட்டை மாவட்டம் (அரக்கோணம் தாலுகா) – ரூ.8 கோடி.


இதில் செங்கல்பட்டு மாவட்டம், பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள முடிச்சூர் கிராமத்தின் அமுதம் நகர், நேமி நத்தம் நகர் மற்றும் வரதராஜ பெருமாள் நகர் பகுதிகளுக்கு மழைநீர் வடிகால் அமைக்க ரூ.4.20 கோடி வழங்கப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள கோவூர், பரணிபுத்தூர், தாரப்பாக்கம், தண்டலம், வரதராஜபுரம், கொளப்பாக்கம், பெரியப்பனிச்சேரி, கெருகம்பாக்கம், மௌலிவாக்கம், இரண்டாம் கட்டளை மற்றும் காரப்பாக்கம் கிராமங்களில் மழைநீர் வடிகால் மற்றும் சாலை வசதிகளை மேம்படுத்த ரூ.34.95 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

**முடிவுரை**

தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1975–ஆம் ஆண்டு சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தைத் தொலைநோக்குப் பார்வையுடன் அமைத்ததால், அவர் **"நவீன சென்னையின் தந்தை"** என்று அழைக்கப்படுகிறார். அவரது முன்மாதிரியான வழிகாட்டுதலின் படி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் பல்வேறு திட்டங்களை, முன்னோக்கு திட்டமிடல் மற்றும் பரந்த கண்ணோட்டத்துடன் நவீன தொழில்நுட்பங்களின் உதவியுடன் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. தற்போதுள்ள அனைத்து திட்டங்கள் மற்றும் வளர்ச்சித் திட்டப் பணிகள் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் புதிய முயற்சிகள் மற்றும் செயல்திறனைத் தெளிவாக விளக்குகின்றன.

**"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறையென்று வைக்கப் படும்.." – குறள் 388.**

**பி. கே. சேகர்பாபு**
**அமைச்சர்**
**இந்து சமய அறநிலையத் துறை**




விரிவாக்கப்பட்ட சென்னைப் பெருநகரப் பகுதி – 5,904 ச.கி.மீ.,




கிளாம்பாக்கம் பேருந்து முனையம் – திட்ட வரைபடம்





மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் 10.03.2023 அன்று பேருந்து முனைய பணிகளை ஆய்வு செய்தார்.




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10.04.2023 அன்று கிளாம்பாக்கம் புதிய பேருந்து முனையத்திற்கு அருகில் அமையவுள்ள ‘தொல்பொருள் விளக்க மையம்’ மற்றும் ‘காலநிலைப் பூங்காவிற்கு’ அடிக்கல் நாட்டினார்

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.